//நினைவூட்டு – 1//

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்.2614/ஆ5/2025, நாள்.22/07/2025**

*****

பொருள் பள்ளிக் கல்வி – புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது (Inspire Award) 2025–2026ம் ஆண்டிற்கான புதிய பதிவுகள் மேற்கொள்வது – தொடர்பாக

பார்வை
1. சென்னை, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய செயல் இயக்குநர் (முகூபொ) அவர்களின் கடித எண். 3447/P1/2024, நாள்.06/06/2025 மற்றும் 17.07.2025
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 17.06.2025
3. வேலூர் மாவட்ட அறிவியல் அலுவலர் (பொ) கடித நாள். 13.07.2025

*****

2025–2026ம் ஆண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதுகளுக்கான (Inspire Award) புதிய பதிவுகள் ஜுன் 15 ஆம் தொடங்கி செப்டம்பர் 15ம் தேதி 2025 வரை பதிவுகள் செய்யலாம். இந்த ஆண்டு முதல் 6ம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு படிக்கும் பள்ளி மாணவர்கள் தங்களது புதுமையான கண்டுபிடிப்புகளை சமர்ப்பிக்கத் தகுதியுடையவர்கள். எனவே இந்த ஆண்டு முதல் அனைத்து பள்ளிகளில் பயிலும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் பதிவு செய்யலாம். ஒரு பள்ளிக்கு அதிகபட்சமாக 5 மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். இதற்காக www.inspireawards-dst.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவுகள் மேற்கொள்ள பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. பதிவுகள் மேற்கொள்ள இறுதி நாள் 15.09.2025.

அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் 6 முதல் 12–ம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் பதிவு செய்யலாம்.

- ➢ மேல்நிலைப் பள்ளியாக இருப்பின் 6 ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை 3 மாணவர்களும் 11ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு அறிவியல் பிரிவில் இருந்து 2 மாணவர்களும் ஆக மொத்தம் 5 மாணவர்கள் பதிவு செய்ய வேண்டும்.
- ➢ உயர்நிலைப் பள்ளியாக இருப்பின் 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை 5 மாணவர்கள் பதிவு செய்ய வேண்டும்.
- ➢ நடுநிலைப் பள்ளிகள் 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை தலா 1 மாணவர் வீதம் 3 மாணவர்கள் பதிவு செய்ய வேண்டும்.

<u>குறிப்புகள் –</u>

1. பதிவு செய்யும்போது அலைபேசி எண் ஓராண்டு அல்லது ஈராண்டுத் தொடர்புக்கு ஏற்ற வகையில் அமையுமாறு பதிவிட வேண்டும். பள்ளியின் தொலைபேசி எண் இருப்பின் அதை அவசியம் பதிவிட வேண்டும். பள்ளி மாறிச் செல்பவர்கள், ஓய்வு பெறப்போகிறவர்களின் அலைபேசி எண்ணை கண்டிப்பாகப் பதிவிட வேண்டாம்.
2. பள்ளி மின்னஞ்சல் மட்டுமே குறிப்பிட வேண்டும். தனிப்பட்ட மின்னஞ்சல்களைப் பதிய வேண்டாம்.
3. வங்கிக் கணக்கு மாணவரின் பெயரில் மட்டுமே இருக்க வேண்டும். பெற்றோர் அல்லது உறவினர் பெயரில் உள்ள வங்கி கணக்கு விவரங்கள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. வங்கிக் கணக்கு மாணவரின் பெயரில் புதிதாக ஆரம்பித்துக் கொள்வது ஏற்புடையது.

4. ஏற்கனவே புத்தாக்க அறிவியல் ஆய்வு விருது பெற்றவர்களை இந்த ஆண்டு மீண்டும் பதிவு செய்யக்கூடாது.
5. மாணவர்களுடைய ஆய்வுகளை புதியதாக சிறப்பாக அமைந்தால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 10,000/- வழங்கப்படும்.

எனவே கொடுக்கப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் (15.09.2025) (Inspire Award) புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதுக்கான புதிய பதிவுகள் மேற்காண் இணையதளத்தில் மேற்கொள்ளாத பள்ளிகள் விரைவாக பதிவுகள் மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. இதுநாள் வரை மிக குறைந்த அளவு பள்ளிகள் மட்டுமே பதிவுகள் மேற்கொண்டுள்ளன. இது மிகவும் வருந்ததக்கதாகும். கடைசி நேர பதிவுகள் மேற்கொள்வதை தவிர்த்து இப்பொருளின் மீது தனிகவனம் செலுத்தி விரைவில் பதிவுகள் மேற்கொள்ள மீள தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) இப்பொருள் சார்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மேலும் அனைத்து பள்ளிகள் www.inspireawards-dst.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவுகள் மேற்கொண்டுள்ளதை பள்ளித் தலைமையாசிரியர்கள் மூலம் உறுதிசெய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ),
வேலூர்.

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம்.
   (தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு தகவல் தெரிவிக்கும் பொருட்டு இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   அனைத்து வகை நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை மற்றும் தனியார் பள்ளிகள், வேலூர் மாவட்டம்
   (இவ்வலுவலக இணையளதம் மூலமாக)

நகல்

செயல் இயக்குநர் (முகூபொ),
தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம்,
சென்னை - 600 025.